1987 மார்ச் 4]

மாண்புமிகு திரு ஆறூர் பு. கோ. ஜகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை (ஆ) வினா விற்கு இடமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்.

சென்னையில் மின் வெட்டு.

திரு என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, On a point of order சில நாட்களுக்கு முன்னாலே நம்முடைய மின்துறை அமைச்சர் அவர்கள் தமிழகத்திலே மேலும் மின் வெட்டு வராது. தற்போது ஆலைகளுக்கு வழங்கியிருக்கின்ற மின்வெட்டைக் கொண்டு அடுத்த மழைக்காலம் வரை சமாளிக்கலாம் என்று சொன்னதாக நான் செய்தியினை பார்த்தேன். ஆனால் இன்றைக்கு காலையிலே சென்னை நகரம் முழுவதும் மின் வெட்டு இருந்தது. ஏன் சட்ட மன்ற உறுப்பினர் விடுதியிலேகூட மின்வெட்டு காரணமாக 3 மணி நேரம் நாங்கள் எல்லாம் குளிக்க முடியாமல் கஷ்டப் பட்டோம். சட்டமன்றம் நடக்கின்ற நேரத்திலே சென்னையிலே இந்த நிலை என்று சொன்னால் தமிழ்நாட்டில் இருக்கின்ற தொலை தூரங்களில் உள்ள கிராம மக்களின் நிலை என்ன என்று நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது Point of order இல்லை, Point of information.

திரு. என்.எஸ்.வி. சித்தன் : Sir I am on a point of information. நான் உங்கள் மூலமாக தெரிந்துகொள்ள விரும்புவது தற்போதுள்ள மின்வெட்டைக் கொண்டே வருகின்ற மழைக் காலங்களை சமாளிக்க முடியுமா? தற்போது மின்சாரம் எவ்வளவு உற்பத்தியாகிறது? எவ்வளவு விநியோகிக்கப்படுகிறது என்ற விவரத்தை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு வி. வி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, சென்னை தென் பகுதியில் காலையில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட மின் தட்டுப்பாட்டை வைத்து தமிழ்நாடு பூராவும் உள்ள மின்சாரத்தைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர்

அவர்கள் கேட்கிறார்கள். அதைப்பற்றி நான் அவையில் நிச்சயமாக அறிக்கை வைக்க தயாராக இருக்கிறேன். காலையைப் பொறுத்தவரைக்கும் நான் தகவல் கேட்டு இருக்கிறேன். வந்தவுடன் அதுபற்றி இந்த அவையில் வைக்கிறேன்.... (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முன் வரிசையில் உள்ளவர்களுக்குத்தான் பாயிண்ட் ஆப் இன்பர் மேஷன் என்ற ஒரு முடிவை அலுவல் ஆய்வுக் குழுவில் எடுத்திருக்கிறோம்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : ஒரு முக்கியமான பிரச்சனை........

மாண்புமிகு திரு வி. வி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, மின் தட்டுப்பாடு, கட்டுப்பாடு, வெட்டு எல்லாவற்றை பற்றியும் அவை முன் வெகு விரைவில் அறிக்கை வைக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எ.எஸ்.ஏ. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, சட்டமன்ற விடுதியிலே மின்வெட்டைப் பற்றி சித்தன் அவர்கள் சொன்னார்கள். சட்டமன்ற விடுதியிலேயே இந்த கதி என்று சொன்னால், நாட்டிலே இருக்கக்கூடியவர்கள்.... ....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நாட்டு மக்களுக்கு எந்தக் குறைபாடு இருக்கிறதோ நிச்சயமாக அந்தக் குறைபாடு உங்களுக்கும் வரலாம்; அதைப்பற்றி யோசியுங்கள், உங்களைப் பற்றி யோசிக்காதீர்கள். மக்களைப் பற்றி பேசுங்கள். நாம் சாப்பிட்டால் போதுமா?

திரு. ஏ.எஸ்.ஏ. ஆறுமுகம் : சட்டமன்ற விடுதியிலே இந்த மாதிரி ஒரு தட்டுப்பாடு இல்லாமல் செய்வதற்கு இந்த அரசு உறுதி தருமா? குடிப்பதற்கு தண்ணீர் இல்லை என்று நோட்டீஸ் அனுப்பப்பட்டிருக்கிறது. அதையும் சரிபார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி சுவாமிநாதன் : தலைவரவர்களே சட்டமன்ற உறுப்பினர்கள் மாத்திரம் இதனால் பாதிக்கப் பட்டார்கள் என்பதல்ல. பாதிக்கப்பட்டவர்களில் நானும் ஒருவன். அதனால்தான் மொத்தமாக சென்னை தென் பகுதி என்று சொன்னேன். டிரான்ஸ்பார்மரில் தடை ஏற்பட்ட தாகச் சொன்னார்கள். முழு விவரத்தையும் இந்த அவை முன் வைக்கிறேன். இனி இம்மாதிரி நடக்காமல் இருப்பதற்கு உறுதி அளிக்கிறேன்.